வெளியீடு—1.

106

சண்பகவல்லி தேவி

அல்லது

தென்னாடுபோந்த அப்பாசிய குலத்தோன்றல்.

T28292

ஆசிரியை:
சித்தீ ஜுனைதா பேகம்

விலை அணா 8

R.M. Hayat Hameed

கிடைக்குமிடம்:—

சித்தீஜுனோதா பேகம்.

9, தெருப்பள்ளித் தெரு,

நாகூர்.

வெளியீடு—1

சண்பகவல்லி தேவி

அல்லது

தென்னாடுபோந்த அப்பாசிய குலத்தோன்றல்

நாகூர்,

ஜனாபா சித்தீஜுனைதா பேகம்

இயற்றியது.

★

1947

காப்பிரைட்.

விலை அணா 8

"உரிமை உரை."

திரு நாகூர் அண்ணலின் திவ்யசரிதையை நான்கே நாட்களில் எழுதி முடிக்குமாறு எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவரும், இன்று ஏகாதிபத்திய ஆட்சியின் பேராசை வெறியான், போதிய உணவு, வைத்தியமின்றி மாண்டொழிந்த ஆயிரக்கணக்கான மக்களில் ஒருவரும், கள்ளமற்ற உள்ளம் படைத்தவரும், என் இளங் குழந்தைகளின் தந்தையாருமான என் அனுதாபத்திற்கும் மதிப்பிற்கும் உரிய

"A. F. மாலிமார்" அவர்கட்கு.

முன்னுரை.

இஃது ஒரு சரித்திரக் கதை. தெளிவாக ஆராய்ந்து தொகுக்கப்பட்ட சரித்திரமன்று. கர்ண பரம்பரையாக வழங்கி வந்ததும், ஆங்காங்கே கிடைத்த சில சரித்திரத் துணுக்குகளும் புலவர் பெருமான் வண்ணக்களஞ்சியம் இயற்றிய "தீனெறி விளக்கமு"ம் யாம் நேரிலே செய்த ஆராச்சிகளும் யாம் இச் சிறுநூலை எழுதற்குத் துணைபுரிபவையாய் அமைந்தன. இத்தகைய மறைந்துபட்ட சரித்திர வரலாறுகளையும், தமிழுலகிற்குப் போதிய அளவு அறிமுகப்படுத்தப் படாத "சூபியாக்களி"ன் சரிதைகளையும், சமூகச் சீர்திருத்த நவீனங்கள், கட்டுரைகள், சிறு கதைகள் முதலியவைகளையும் புதுமுறையில் எழுதி வெளியிட முயற்சிக்கின்றோம். இத்தகைய பணி, ஆண் மக்களை விடப் பெண் மக்கட்கே ஏற்புடைத்து. ஆண் மக்கள் சாதி சமயத்தான் தூண்டப்பட்டு, சரித்திர உண்மைகளை மறைத்தும், திரித்தும் எழுதலாம். பெண் மக்கள் இயல்பாகவே ஆழ்ந்து சிந்திக்கும் மனத் தன்மையும், இரக்கமும் உடையவர்கள். எனவே, புத்துலகம்—புது மாற்றம் விழையும் முஸ்லிம் உலகம்—மறுமலர்ச்சி விரும்பும் தமிழர் தம் நாடு பெண் எழுத்தாளர்களை வரவேற்குமாக.

இவ் வெளியீட்டிற்குத் துணைசெய்த நாகை நகர சபைத் துணை தலைவர் மு. யூ. நவாபு சாகிபு மரைக்கார் அவர்கட்கும், கொடைவள்ளல் எனத்தகும் காரை, சா. பிச்சை மரைக்கார் அவர்கட்கும், திருமலைராயன்பட்டினம் போஸ்ட்மாஸ்டர் M. H. M. Bey அவர்கட்கும் எமது நன்றி.

ஆக்கியவள்.

நாகூர். 1-4-47

அணிந்துரை.

பழையன வேண்டும். புதியன புனைதலும் வேண்டும். பழையன ஒழித்தே புதியன் புனைதன் வேண்டுமென்பது சிறப்புடைத் தொன்றன்று. அல்லன் மாக்கள் ஆக்கம் விழைந்து, ஊற்றின்ப வாழ்வை துச்சமென்றுன்னி, போகி மரத்தடியிலே, ஞானக கலை வாழ்வு வாழ்ந்த புத்தபிரான் சிந்தனைகள் மொழியாகி மலர்ந்து மிகப்பல நூற்றுண்டுகளாயின. வள்ளுவன் தந்த வாயுறை வாழ்த்து இரண்டு பத்து நூற்றுண்டுகட்கு முன்பு பேசிய தமிழன் பேச்சு. அறப் பலி பீடத்தில் தன்னுருயிர் துறந்த, கிரேக்க சாக்ரடிஸ் (Socrates) பேசியது நீண்ட பல ஆண்டுகட்கு முன்—கம்பன் தந்ததும், காளிதாசன் சாகுந்தலமும், தாந்தேயின் தெய்வத்திருக்காட்சியும், இப்னுல் அரபியின் "ஹகீகத்துல் ஹகாயிகும்" மிகப் பழையன—விர்ஜிலும், ஓமருந், சஃதியும், ரூமியும், கண்ட தெல்லாம் பழையன—"புராண அபி நவ" என்ற வடநூலார் கூற்றை ஓர்க-பழமை எனும் தாய் ஈன்ற சேய் புதுமை என்க—சேயுள்ளம் தழைக்க-தாயுள்ளம் பொன்றல் எற்றுக்கு? புரட்சி ஓங்க, புதுமை செழிக்க பழமை போற்றுதல் வேண்டும். போற்றும் வாழ்வின், புது மலர் பிலிற்றிய நறுந்தேறலின் சிறு துளி இவ்வேடு.

கீழ் நாட்டில், வீரக் கொடியுயர்த்தி, சிந்தனை மண்டிலத்தில் விரைந்து, இவர்ந்து, காணுதன பல

கண்ட பெருமை அப்பாசியாக்களுக் குரியது அறங் கொண்டு அணைத்த அப்பாசியாக்கள் பலர். மறங் கொண்டு ஒறுத்தவர் சிலர். கலை வாழ்வில் ஊறித்தி ளைத்து, நல்லதோர். பண்பாட்டை நாட்டிலே காண, ஏட்டிலே தீட்ட, பெரிதும் முயன்ற அப்பழம் பெரும் மக்கள் சேவை, திசையாற் இசை போயதொன்று.

கலை தழைக்க, தமிழகம் போந்த அப்பாசிய குலத்தோன்றலை இந்நாடு மறந்துவிட்டது. தமிழ் வேந்தரின் பரி வீரர்களாக தொண்டு செய்த, அரபி களின் பெற்றியை, பெரிய புராணம் பேசுகின்றது நரியைப்பரியாக்கி, பாண்டியன் முன் தோன்றிய வீரக் கடவுளை, "இராவுத்தன்" என்று குறிக்கின்ருன் புலவன்—தனி முதற் பொருட்கு, பொல்லாப் பெயர் புனைதல் சேக்கிழார்க்குப் புறம்பானது—நல்ல வாழ் வின், மேல்வரிச்சட்டமாக, கருதப்பட்ட மக்கள் முஸ் லிம்கள் என்பதற்கு அகச்சான்று அது.

தென்காயற் திருப்பதியை தீயிட்டழிக்க முயன்ற, வெள்ளை நாட்டு போர்த்து கீசியருடன் மலைந்து, வென்றிகொண்ட சேரநாட்டு மாப்பிள்ளை முஸ்லிம்களையும், கடற்படைத் தலைவர்களான குஞ் சாலி மரைக்காயரையும், அலி யூசுப் மரைக்காயரை யும், இப்பொல்லா நாட்டு சரித்திரம் துணிந்து பேச மறுத்துவிட்டது. பழந்தமிழருடன் பேதமின்றி கலந்து, "ஆசியா ஆசிய மக்கட்கே" என்று எக்காள மிட்ட, அம் முஸ்லிம்களின் அழகுத்திருக்காட்சி, என் மனத்திரையில், மெல்ல எழுந்து கலைத்தாண்டவம் புரிகின்றது. கார்டோபாவும், தாலிதோவும், பக்தா

தும, அல்ஹாம்பராவும், "வா, வா" என்றழைக்கின்றன. எம் பெருமானர் திருவாழ்வை, கிலாபதே ராஷிதாவை" முதலில் ஏட்டிலேகண்டு, பின் நாட்டிலே விரிப்பாம் என மாறு உள்ளத்துடன், போராடும் இளைஞர் தம்தொண்டு, இன்னேவேண்டும்.

தேவி சண்பகவல்லி அத்தொண்டிலே பங்கு கொள்ள தோன்றுகிருள். அவளை ஆதரித்துப் போற்றல் வேண்டும் என்று நான் முஸ்லிம்களை விழைகின்றேன்.

திரு-பட்டினம்
4-4-47 } **மு. ச. ஹுசைன் முனவ்வர்பே.**

★

சண்பகவல்லி தேவி

அல்லது

தென்னாடு போந்த அப்பாசிய குலந்தோன்றல்.

மார்கழித் திங்கள் கடைசி. தடாகமெங்கும் செந்தாமரைச் சிரித்தது. வயல்களெங்கும் நெற்கதிர்கள் முற்றித் தலைசாய்ந்து தரைக்குத் தங்கமுலாம் பூசின.

அன்று பகலெல்லாம் அங்கு நடந்த கொடிய போரில் வீர சுவர்க்கம் அடைந்த எண்ணற்ற போர் வீரர்களின் உடல்கள் கால்வேறு, கை வேறாகச் சின்னாப்பின்னப்பட்டு, அங்குமிங்குஞ் சிதறிக் கிடந்தன. மக்களைப்போலவே போரில் மாண்டொழிந்த குதிரைகளும், போர் யானைகளும் ஆங்காங்குக் காணப்பட்டன. அப்போர்முனையிலே எங்கு நோக்கினும் கோரக் காட்சி.

அப்படுகளத்திலே, கழுகுகளும் பருந்துகளும் அங்குமிங்கும் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. நாய்கள் குரைத்தன; நரிகள் ஊளையிட்டன. தூரத்தேயிருந்து போரில் வெற்றி கண்ட முஸ்லிம் சைனியத்தின் 'இக்ரு' முழக்கம் வந்து கொண்டிருந்தது.

மனித வாசமற்ற அந்தப் பயங்கரமான போர்களத்திலே ஒரு கருப்பு சால்வையால் தன்னை நன்றாய் மூடிக் கொண்டிருந்த ஒரு மனித உருவம், சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்தவண்ணம் நடந்து போய்க்கொண்டிருந்தது. அது மனித உருவந்தானா? அன்றி பேயா? இல்லை; அது மனித உருவந்தான். சற்று நெருங்கிப் பார்த்தால், ஆ! என்ன ஆச்சரியம்! அஃது ஒரு பெண்ணின் மெல்லிய உருவமா?

"சோரியாறெழுந்து பல மலைக்குலமெனக் குவிந்த, சடிகளிற் றிரண்டு கழுகுகள் பருந்து முதலியன வட்டமிட்டுத்திரியும் அப்போர்களத்திலே, அந்நேரத்திலே வருதற்குரிய 'விதி' அவளுக்கு என்ன ஏற்பட்டதோ! இவளுக்கு இங்கென்ன வேலை? யாரைத் தேடி அல்லது எதைத் தேடி இவள் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு போகிறாள்?

இவள் ஒரு அரசக் குடும்பத்தினளாய்த் தான் இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பிணக் குவியல்களின் நடுவிலே நடமாட இத்துணை துணிச்சல் ஏற்படுமா? அந்த அழகிய கண்களிலே அறிவொளி வீசிற்று. அவளது நெற்றியிலே படிந்துகிடக்கும் மயிர் சுருள்கள்தான் எத்துணை அழகு!

சற்று நேரத்திற்கெல்லாம், அந்த இளநங்கை முறிந்து கிடந்த ஒரு தேர் அருகே சென்று நின்றாள். ஆங்குக் குவியலாகக் கிடந்த உடல்களை ஒவ்வொன்றாக எடுத்து அப்பால் வைக்கத் தொடங்கினாள். சிறிது நேரத்திற்கெல்லாம தான் தேடி எடுக்க விரும்பிய ஒரு உடலை எடுத்து, சற்றுநேரம் அதையே உற்றுப் பார்த்தாள். அவள் வதனத்தில் சில மகிழ்ச்சிக்குறி உண்டாகியது. உடனே அவ்விடத்திலேயே அமர்ந்து, அவ்வுடலின் நெற்றியையும், மார்பையும் தொட்டுப் பார்த்தாள். பிறகு, அதன் தலையை எடுத்துத் தன் மடிமீது வைத்துக்கொண்டாள். தான் கொணர்ந்த தண்ணீரில் கொஞ்சம் எடுத்து முகத்தில் தெளித்து, ஒரு சொட்டுத் தண்ணீர் வாயிலும் வார்த்தாள்.

உயிரற்றுத் தோன்றிய அந்த முகத்தில் சிறிது நேரத்திற்கெல்லாம் உயிர்களைத் தளிர்த்தது. மெள்ளச் கண்கள் திறந்தன. பாதி திறந்த அக்கண்கள் தன் எதிரே நிற்கும் சிறுமியை உற்றுப்பார்த்தன.

"ஆ நீயா? ......குழந்தாய், எப்படி இங்கு வந்தாய்?" என்ற வார்த்தைகள் அவ்வுருவத்திடத்திலிருந்து மெள்ள

வெளிவந்தன களைப்பினால் மீண்டும் கண்கள் மூடிக்கொண்டன.

"அப்பா, என்னருமை அப்பா! இன்று நடந்த போரில் உன்னுடைய வியக்கத் தக்க வீரச் செயல்களைப்பற்றிக் கேள்வியுற்றேன். என் மனம் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தது தெரியுமா? அப்பா, நீ மறைந்துவிட்டாலும் உன்னுடைய மாசற்ற வீரத்தின் புகழ், என்றென்றும் இவ்வுலகிலிருந்து மறையாது" என்றாள் அச்சிறுமி.

மூடியிருந்த கண்கள் மீண்டும் திறந்தன. உடம்பிலிருந்து அதிகமான செந்நீர் வெளிப்பட்டுப் போனமையால், பேச இயலவில்லை. என்றாலும் சமாளித்துக்கொண்டு 'என் வீரக் குழந்தாய், யுத்தம்... எப்படி முடிந்தது. நீ எதற்காக இங்கு வந்தாய்?" என்று ஈனக் குரலில் கேட்டான்.

"அதைப்பற்றிய ஐயங்கூட உனக்கு எழுகின்றதா, அப்பா! அதோ கேள், முஸ்லிம் சைனியத்தின் வெற்றி முழக்கத்தை!"

அவன் வதனம் வாடியது. "இந்தப் படுகளத்திலே நீ எதற்காக வந்தாய்?" என்று மீண்டும் வினவினான்.

"உன்னைப் பார்ப்பதற்காகத்தான், நாளைய போரில் உன்னை வீழ்த்தியவனைக் கொன்று பழிக்குப்பழி வாங்குவேன்; இந்தத் துலுக்கனைப்போல் எண்மடங்கேயானாலும், அவர்களைத் துரத்தி வெற்றிக்கொள்வேன். நான் பழிவாங்குதற்குரியவன் எவன்?" என்று படபடப்பாய்க் கேட்டாள் அச்சிறுமி.

"குழந்தை, சண்பகம், சாந்தமாயிரும்மா! என்னை வெற்றிக்கண்ட வீரன், அதோ வீழ்ந்துகிடக்கிறான். எனது வீழ்ச்சி, அவனது வீரத்தை அறுதியிடும் அளவுகோல்

என்றாலும், வீரர்க்குவீரனாய் அவனை மற்றொருவன் வீழ்த்தி விட்டான. அவன் கருணையின் இருப்பிடம். என்னை வீழ்த்துதற்குச் சற்று முன்னே எத்தகைய இதோபதேசம் புரிந்தான். அவன் ஒரு முஸ்லிம் தளகர்த்தன். கடமையின் வழிநின்று செயலாற்றினான்" என்றான் அமைதியாக.

அவனது பேச்சைக் கேட்டு சற்று அமைதியடைந்த அச்சிறுமி ''அப்படியானால் என் தந்தையே! உன்னைத் தூக்கிச் செல்கிறேன்'' என்று கூறி எழுந்திருக்க முயன்றாள்.

"வேண்டாம், பயனில்லை. எனக்குப் பேசக்கூட முடியவில்லை. என்னை வீழ்த்திய அம்முஸ்லிம் தளகர்த்தனின் பெயர்.......? என்னவென்றோ சொன்னான்... ஆம்! நினைவு வந்துவிட்டது. அப்பாஸ் என்பது. ஆ! அதோ பார்! அவன கால்கள் அசைகின்றன. அவன் வாயிலே கொஞ்சம் தண்ணீர் ஊற்று. போர்முனையிலே சாவை எதிர் சென்றழைக்கும் வீரன் எவனாயினும் அவனுக்குப் பணிபுரிதல் நம் பெருங்கடமை.'' என்று சற்று வாய்க்குழறியபடியே கூறினான்.

அளப்பரிய செந்நீர் வெளிப்போந்தமையான் வன்மை குன்றிய அவ்வீரப் பெருந்தகை, இவ்வளவு பேசியதும் அப்படியே அயர்ந்துவிட்டான். மூச்சுவாங்கத் தொடங்கியது. சற்று நேரத்திற்கெல்லாம் விழித்திருந்த அவன் கண்கள் மூடின; அவனது உயிர் இந்த உடலாகிய சிறையினின்று விடுதலையடைந்தது.

2

அழகாபுரி என்பது பாண்டி நாட்டைச் சேர்ந்த ஒரு சிற்றூர். காலமாறுபாட்டினால், இப்போது அஃது "அழகங்குளம்" என்று வழங்கப்பெறுகின்றது, அவ்வூர் அழகங்குளம் என்று திரிந்தமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவை நமக்கு வேண்டற்பாலனவல்ல

அழகாபுரியைச் சுற்றி நல்ல உறுதியான கோட்டை மதில்களும், அகழியும் உண்டு. பாண்டி நாட்டின் ஒருபடை வீடு என்று கூறுமபடியான ஒருசிறு பட்டாளமும் உண்டு. இப்போது அவ்வுறுதிவாய்ந்த கோட்டை மதில்கள் இடிந்து தகர்ந்துபோய்விட்டன. என்றாலும், பாழ்பட்டுப்போன அவ்விடத்தை அவ்வூர் மக்கள் இன்றும் "கோட்டைக்காடு" என்றே அழைக்கின்றனர்.

அச் சிற்றூறை ஏறத்தாழ 700 ஆண்டுகட்கு முன்னர் ஆட்சிபுரிந்தவன் அழகேந்திர பாண்டியன் என்னும் ஓர் சிற்றரசன். பாண்டியர் கொடியின் மாண்பைச் சேரனும் சோழனும் புகழுமாறு செய்த பெருவீரன் அழகேந்திர பாண்டியன். திங்கள் குலத்தான் விக்ரம பாண்டியனின் ஒன்றுவிட்ட மைத்துனன்.

அக்குறுநில மன்னனுக்குச் சண்பகவல்லி என்ற ஒரே புதல்வி உண்டு. அவள் பட்டத்திற்குரியவளாதலின், யானை ஏற்றம், குதிரை வற்றம் முதலிவைகளெல்லாம் அவளுக்குக் கற்பிக்கப்பட்டதோடு போர்ப் பயிற்சிகளும் அவளுக்கு அளிக்கப்பெற்றன. அவளது பரிவும் பாடலும், கிளிமொழியும், குறுநகையும், பாண்டியர் பரம்பரையும், எல்லையில்லா வன்மையும் மக்கள் மனத்தை கொள்ளை கொண்டது வியப்பன்று.

மாலை மணி 6 இருக்கலாம். அந்தப்புரத்தில் ஒரு பாகம். அழகிய வர்ணங்கள் தீட்டிய ஒரு விரிப்பின்மேல் அரசன் அழகேந்திரபாண்டியன் திண்டுபோட்டுச் சாய்ந்து கொண்டிருந்தான். அண்மையில் அழகேந்திரன் குல விளக்கு சண்பகவல்லி தேவி அழகே உருக்கொண்டாற் போன்ற தோற்றத்துடன் வீற்றிருக்கின்றாள்.

"அப்பா, என் நேச அப்பா, வெளியில் வா. பூங்காவிற்குப் போவோம். அவ்விடத்தில் எவ்வளவு இன்பமாய்க் காற்று வீசுகின்றது. ஜனசமூகத்தில் பிரசன்னமாயிருக்கும்

தங்கள் வதனம் தனிமையில் வாடுதற்குக் காரணம் என்ன?" என்று ஆவலோடு வினவினுள் சண்பகவல்லி தேவி.

"குழந்தே, சண்பகம்! சும்மா மனத்தை அலட்டிக் கொள்ளாதே, காற்றும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். அடி என் கண்ணே! உன் அன்பைத் தவிர வேறொன்றும் எனக்குத் தேவையில்லே. உன் கவலேயே. என்னே இத்தனே ஆண்டுகளாகப் பிழைத்திருக்கச் செய்ததென்னலாம் நீ மட்டும் இல்லாவிட்டால் நான் எப்போதே மக்கி மடிந்து மண்ணுகி ஒழிந்திருப்பேன்" என்றுன் அழகேந்திர பாண்டியன்

"அப்பா, நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லே. உங்களுக்கு வந்துற்ற துயரம் என்ன? அவ்வளவு துக்கம் ஏனப்பா?—அம்மா"......என்றுள் மகள் சண்பக வல்லி தேவி.

பாண்டியன் திடுக்கிட்டான். "பேசாதே சண்பகம்! அவளேப் பற்றி என்னிடம் இனி ஒருபோதும் பேசாதே. அஃதிருக்கட்டும் குழந்தே, உன் கலியாணத்தைப்பற்றி உன் முடிவென்ன? உன் மாமன் விக்ரம பாண்டியனின் புதல்வன் இந்திர பாண்டியனே உன்னே மணக்க விரும்புகிறுன்; உன் விருப்பம் என்னவோ!" என்ஞன்.

சண்பகவல்லி தேவியின் அழகிய கன்னங்கள் சிவந்தன. நாணத்தினுல் தலே குனிந்தாள். "என்ன? தங்களே மறந்தா?" என்று சொல்லி தன் தந்தையை நிமிர்ந்து பார்த்தாள். ஒளிவீசிய அக்கருவிழிகளின் பார்வையில் இறந்துபட்ட தன் அருமை மனேவி சீதா தேவியையே கண்டான் அவன். அவன் நெஞ்சத்தில் பல்வேறுபட்ட உணர்ச்சிகள் எழுந்தன. அவன் எண்ணங்கள் பல ஆண்டுகளேத் தாண்டிப் பின் சென்றன. ஆம் 16 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆருயிர் மனேவி சீதாதேவி, தன் இரண்டு ஆண்டே நிரம்பிய பெண் குழந்தை சண்பகவல்லியைத் தன்னிடம் ஒப்ப

டைத்து விட்டு உயிர் துறந்த அவலக்காட்சி, அவன் கண்கள் முன்பு காட்சியளித்தது.

அவ்வமயம் வாயிற்காப்போன் வந்து வணங்கி நின்றான். 'மன்னர் பெருமானே! இரண்டு குதிரை வீரர்கள் சமூகத்தைக் காணும் பொருட்டு வந்திருக்கின்றனர்'' என்றான் அக்காவலன்.

"இங்கு உடனே அழைத்துவா" என அரசன் கூறலும், காவலன் சென்று இரண்டு குதிரை வீரர்களை அழைத்து வந்தான்.

வந்த வீரிருவரும் அரசனை வணங்கினர். "எங்கிருந்து வருகிறீர்கள்" என்றான் அரசன்.

"விக்ரம பாண்டிய மகாராஜாவிடமிருந்து வருகிறோம். எங்கிருந்தோ வந்த துலுக்கப்படைகள் கோட்டையை முற்றுகையிட்டிருக்கின்றன. மிகப் பெரிய சைனியம். அரசர் பெருமான் தங்களைப் பட்டாளங்களோடு உடனே வரும்படிக் கூறினார்கள்" என்று கூறி அரசரது முத்திரையிடப்பெற்ற ஓலையை அளித்தனர் காவலர்.

"என்ன! துலுக்கப் படையா! கூற்றுவன் பிடர்பிடித்துத் தள்ள இங்கு வந்தனரா? எவ்வளவுதான் பெரும்படையாயிருப்பினும் அதனை மசகமாய் முடிக்கும் மாறன் என்பதை அறியார் போலும்! எத்தகைய சிறந்த வீரனும் விக்ரமனை வெல்லுதற்கியலுமோ? அவர்களை கொல்லுதற்கு என் கை வாளொன்றே போதாவோ" என்று வீரம் பேசி, அரசன் விகரம பாண்டியனிடமிருந்து வந்த சீட்டைப் பார்த்தான்.

அவன் வதனம் கோபத்தினல் சிவந்தது. அண்மையில் அமைதியோடு நின்றுகொண்டிருந்த அருமருந்தன்ன மகள்

சண்பகவல்லியை நோக்கிச் "சண்பகம், சொற்பவீரர்களை மட்டும் இங்குக் கோட்டைக்குக் காவலாய் விட்டுச் செல்கிறேன். கண்ணே, நான் வருமளவும் அரசியல் விஷயங்களையெல்லாம் கவனித்துக்கொள், போய் வரட்டுமா?" என்றான். அவன் கண்களில் நீரரும்பியது.

"அப்பா! போய் வாருங்கள். எதைப்பற்றியும் தாங்கள் வருந்த வேண்டாம். வெற்றியோடு திரும்பி வருவீர்கள்" என்று சொல்லி தன் தகப்பனின் கழுத்தில் கையைபோட்டு அணைத்தாள் சண்பகம். அவள் கண்கள் கலங்கின. தன் தந்தையைத் தானே அவள் தாயாகக் கண்டாள்?

3

கீர்த்திவாய்ந்த அப்பாசிய வம்ச கலீபா, அமீருல் மூமினீன் ஹாருன் அல்ரஷீத் அவர்களுடைய புதல்வரான அல் மாமூமின் காலத்தில், அப்பாசிய சாம்ராஜ்யம் நாகரிகத்திலும், பிறவற்றிலுஞ் சிறந்து விளங்கிற்று. ஒன்பதாவது கலீபா அபூஜஃபர் ஹாரூன அல்வாசிக் பில்லா அவர்களின் அரசாட்சிக்குப் பின்னர் தான் அப்பாசிய சாம்ராஜ்யம் இழிநிலை எய்த ஆரம்பித்தது.

அப்பாசிய வம்ச 34-வது கலீபா அல்முத்தஸிம்பில்லா காலத்தில்தான் மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும் நிறைந்த பழம் பெரும் பட்டணமாகிய பக்தாதை தார்த்தாரியர் படை எடுத்தார்கள். பழம் பெருமை வாய்ந்த பக்தாத் நகர் ஒரு சில நாட்களில், (6 வாரத்தில்) சாம்பராக்கப்பட்டது. கலீபா அல்முத்தஸிமும் கொல்லப்பட்டார். அதுபொழுது, அப்பாசிய வம்சத்தார் பல பாகங்களுக்குஞ் சிதறுண்டு ஓடினார்கள்.

அங்ஙனம் சிதறுண்டு, மாபெரும் வீழ்ச்சியுற்று ஓடிய அப்பாசிய வம்சத்தாருள் ஒரு மாகாணத்தின் கவர்னரா யிருந்த (ரையாதின் கவர்னரா யிருக்குமென்று நினைக்கி

கிறேன்) ஒரு இளம் வாலிபரும் ஒருவர். அவர் அழகிய உருவும், விழுமிய தோற்றமும் உடைத்தானவர். சிறந்த வீரர். அவர் பல ஊர்களுஞ் சுற்றிக்கொண்டு, "றூம்" நகரம் சென்று, ஆங்கு அரசாட்சி செய்துகொண்டிருந்த அரசர் மகுமூதிடம் கப்பற்படைத் தலைவராக அமர்ந்தார், சின்னாட்கள் மந்திரியாகவும் இருந்தார்.

இங்ஙனம் அமர்ந்துகொண்ட நம் இளைஞர் பெயர் அப்பாஸ் என்பவர். அவர் அமைச்சரா யிருந்தமைபற்றியும், படைத் தலைவரா யிருந்தமைபற்றியும் வஜீர் அப்பாஸ்பே என அழைக்கப்பட்டார். அன்பும் அருளும் ஒருங்கமைந்த அவ்விள நம்பியின்மீது அரசர் பெரிதும் அன்பு பாராட்டினார்.

அஞ்ஞான்று, எம்பெருமானார் இரசூலே கரீம் (ஸல்) அவர்களின் வழித்தோன்றலான செய்யது இப்ராஹீம் என்னும் பெரியார், மதீனாவின் தலைவரா யிருந்தார்கள் அவர்கள் ஒரு நாள், மதீனாவின் பள்ளியில் "இஷா" தொழுதுவிட்டு, 'பொறி வழி மனத்தைப் புகுத்திடா தியானம் புரிந்திடிற்போக நித்திரைவந், தறிவினிலடங்கத் துயின்றனர்—" அங்ஙனம் அப்பெரியார் துயில்கொண்டபொழுது, கருநாகமொன்று தம் கையிமேல சுற்றிக்கொண்டிருக்கக் கனவு கண்டு திடுக்கிட்டு விழித்தெழுந்தார்கள். ஆனால், அண்ணலவர்கள் அக்கனவைப்பற்றி அதிகமாக ஒன்றும் சிந்தித்தார்களில்லை. மறுநாளும், அவ்விடத்திலேயே துயில்கொண்டபொழுது, அவர்களது கனவில் "நறிய கஸ்தூரி கமகமகமென யாரசு ஹாபிகள் சூழ்ந்து, செறிதரத்திருத்தாள் புவி தொடா திலங்கச் செம்மலாகிய முகம்மது"வைக் கண்டார்கள். அப்பெருமானாரின் மாசற்ற வதனம் கருத்திருந்தது. அதுகண்ட சுல்தான் செய்யது இப்ராஹீம் ஒலியுல்லா அவர்கள், எம்பெருமானாரை நோக்கி, "... நின்ற நூன் மறைக்கு கெடியவான் புவிக்கு நிகழ்ந்து பற்பல படைப்புகட்கும் வென்றிநாயகமே தவத்தினுட் பொருளே மேலவன் கிரணவொன் மணியே! என்னையோர் பொருட்டாய்க் குறித்து நீர்

வருதற் கேழையானியன்ற பாத்திரமோ, தன்னையோர் நிகராற் றுயர்ந்தவன் திருமுன்றனித்து மன்றாடு நாயகமே, பின்னை யோர் தவமு மியற்றிலன் சிறியேன் பெருந் திருக்கருணை பொங்கியதான் முன்னையோர் தவப்பேற் றினிலெனைச் சேர்த்து முயன்றெழுந்திடச் சொல வேண்டும்'' என்று வேண்டி நின்றனர். அதுகேட்ட அவ் அண்ணல், செய்யது இப்ராஹீம் ஒலியுல்லா அவர்களை நோக்கி, அவர்களும் இயல்புக்கு மாற்றமான குரலிலே, "இஸ்லாத்திற்கு உண் டான இந்த மாசை நீர் போக்கமாட்டீரா?" என்று வினவி னார்கள்.

பெருமானாரின் எடுத்த குரல், சுல்தான் சையயது இப்ராஹீம் ஒலியுல்லா அவர்களின் இதயத்தில் பாய்ந்தது. "எம்பெருமானே! நான் ஆற்றவேண்டும் பணி என்ன?" என்று பெருமானாரை நோக்கி வினவ, அவ்வமயம் வைகறை வணக்கத்திற்காக அழைக்கும் "அல்லாஹு அக்பர், அல் லாஹு அக்பர்" என்ற இஸ்லாத்தின் இனிய கூப்பாடு காதில் விழுந்தது. உடனே திடுக்கிட்டுத் துயில் நீத்தெழுந் தார்கள். அவர்கள் உடம்பிலே வியர்வை வெள்ளமாகப் பொழிந்தது; உடம்பு ஒருவிதமாக நடுங்கியது. தமக்குப் பெருமானார் இட்ட கட்டளை என்ன? என்பதுபற்றி நீண்ட நேரம் சிந்தித்தும் ஒன்றும் புரியவில்லை. அன்று வெள்ளிக் கிழமை 'குத்பா' தொழுதுவிட்டு, அதே கவலையாக உட் கார்ந்துவிட்டார்கள். அன்றைய அலுவல்கள் எதிலும் மனம் செல்லவில்லை.

மதீனா நகரின் பள்ளிவாசலிலே இவ்வாறு அவர்கள் அமர்ந்திருந்தபோது, அவர்களிடத்து பேரன்புமிக்க அவ் வூர் பெருங்குல மக்கள் அவர்களைச் சூழ்ந்து உட்கார்ந்திருந் தனர். அவர்களில் ஒருவர் எழுந்து நின்று ஒலியுல்லா அவர் களை நோக்கி, "அண்ணலே, தாங்கள் வாட்டமுற்றிருப்ப தேன்" என்று வினவினர்.

ஒலியுல்லா அவர்கள் பதிலிறுக்குமுன், அவண்வந்த ஒரு பெரியவரிடத்தில் அவர் கண் பார்வை விழுந்தது. அவர் இவ்விடத்தில் ஏதோ முறையிட விழைபவர் போல் தோன்றினர். அவருக்கு வயது ஐம்பது இருக்கும். பரந்த நெற்றி, திடகாத்திரமான உடல். ஆனால், மிகவும் மெலிந்து வன்மை குன்றியிருந்தார்.

"நீங்கள் யார்? இங்கு ஏதேனும் சொல்ல வேண்டுமா? ஏதேனும் உமக்கு மனக்குறையுண்டா?" என்று ஒலியுல்லா கேட்டார்கள்.

"அண்ணலே, ஆம்! தங்களிடம் முறையிடவே என் உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு இங்கு வந்தேன். எனக்கு நேர்ந்த இல்லை இஸ்லாத்திற்கு இழைத்த இந்த அநீதிக்கு ஏற்ற பரிகாரமில்லையா?"

"என்ன! என்ன!! உமக்கு என்ன நேர்ந்தது? இஸ்லாத்திற்கு இழைத்த அநீதிகள் என்ன? சீக்கிரம் சொல்லும்?"

"அண்ணலே! நான் இந்த அறபிநாட்டைச் சேர்ந்தவன். நாங்கள் வர்த்தகத்தின் பொருட்டுப் பல நாடுகளுக்குஞ் சென்று வருவது வழக்கம். ஆங்காங்கே நாங்கள் கொண்டுபோன சரக்குகளை விற்றுவிட்டு. ஆங்காங்கு சரக்குகளைக் கொணர்ந்து இங்கு வர்த்தகஞ் செய்வோம். இவ்வாறு நாங்கள் வாணிபஞ் செய்யவேண்டிச் சென்றாலும், நாங்கள் போகுமிடந்தோறும் இஸ்லாமிய பிரசாரம் செய்வோம். அவ்வாறே நாங்கள் தென்னிந்தியாவிலுள்ள பாண்டிய நாட்டிற்கும் பல முறை சென்றதுண்டு......"

"சகோதர பேச்சை வளர்த்தவேண்டாம்; கொஞ்சம் சீக்கிரம் சொல்லுங்கள். அங்கே நிகழ்ந்ததென்ன?"

"இங்ஙனம் நானும் என் நண்பர் மூவரும் வாணிபஞ் செய்யவேண்டி பாண்டிய நாட்டிற்கு சென்றிருந்தோம். அங்கே எங்களுக்கு ஓய்வு கிடைத்தபோதெல்லாம், இஸ்லாமிய பிரசாரஞ் செய்துவந்தோம். எங்கள் இனிய போதனைகளுக்குத் தலைசாய்க்க பலர் முன்வந்தனர். எங்கள் கூப்பாடுகளுக்கு தலைசாய்த்து, இஸ்லாத்தின் பக்கல் வந்த ஒரு பெரியார் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவர்; அருளொழுகு மனத்தினர்; ஜெயவீர ராமபாண்டியன் என்பார் அவர் மகன் சௌந்திர பாண்டியனென்பான் இஸ்லாத்தின் பரம விரோதி. அவனது தந்தையார் இஸ்லாத்தின் பக்கல் வந்ததும் அவன் எங்கள்பேரில் பொறுமை கொண்டான். அப் பொறுமை மிகுதியான், அரசன் விக்ரம பாண்டியனிடம் சென்று, நாங்கள் இந்துமதத்தின் விரோதிகள் என்றும், எங்களை இப்படியே விட்டால், இன்னும் கொஞ்ச நாட்களில் ஹிந்து மதமே தமிழ்நாட்டில் தலைகாட்டாமல் அழிந்துவிடுமென்றும், இன்னும் ஏதேதோ எங்கள் பேரில் பொய்வதந்திகளைக் கூறியிருக்கிறான். அரசன் சீரிய செங்கோலுடையவன்; எனினும், மதவெறி பிடித்தவன், ஹிந்து மதத்தித்திற்கு ஏதுங் கேடு நேருமெனில், அவன் உயிரே போய்விடும். தன் உயிரினும் மேலாக மதத்தை எண்ணிவன். எனவே, எங்களை. ஏமாற்றி மத மாற்றஞ் செய்த குற்றத்திற்காக கொலைபுரியும்படி கட்டளையிட்டான்.

"என்ன! என்ன!! உங்களை கொலைபுரியும்படியா கட்டளையிட்டான்? 'இஷா அத்தே' இஸ்லாத்திற்காக தொண்டாற்றிய உங்களை எவ்வகைக் குற்றமும் புரியாத உங்களைக் கொல்லுமாறு கட்டளையிட்ட பாண்டியன் சடுதியில் அழிந்து விடுவான். சகோதரரே! உங்கள் நண்பர்கள் எங்கே? என் இரத்தங் கொதிக்கிறது. சீக்கிரம் சொல்லும்"

"அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்றார் வந்தவர்."

சைய்யித் இப்ராஹீம் ஒலியுல்லா அவர்களும், ஆங்கிருந்த ஏனையோரும், "ஆ! கொலையா! படுகொலை!!" என்று அலறினர்கள். சிறிது நேரம் அமைதி நிலவியது.

"அங்ஙனமாயின், நீர் எங்ஙனம் உயிர் தப்பினீர்" என்று வினவினார்கள். அண்ணலவர்கள்.

"அஃது ஒரு வியக்கத்தக்க நிகழ்ச்சி எதிர்பார்க்க முடியாதுங்கூட, ஆண்டவன் தான் அந்த அரசிலஞ் செல்வி மூலமாக என் உயிரைக் காப்பாற்றினான், நான் இங்கு வந்து இச்செய்தியைத் தங்களிடம் அறிவிக்கும் பொருட்டு" என்றார் அவர்.

"அந்த இளவரசி யார்? விக்ரம பாண்டியன் மகளா?"

"அல்ல, அல்ல; பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஒரு குறுநில மன்னனின் மகள்; அவள் பெயர் சண்பகவல்லி. அவள் சிறந்த அழகும் சீரிய குணங்களும் அமையப்பெற்றவள். அவள் தான் என்னை மறைத்துவைத்துக் காத்தாள். அவள் ஒருத்தி அங்கில்லாவிட்டால், நான் இங்கு மீண்டு வந்திருக்க இயலாது. அல்லாஹ் அவளைக் காப்பாற்றுவான்" என்றார் அவர்.

"அவளுக்கும் உங்களுக்கும் எப்படி நட்புண்டாயிற்று? அவள் இஸ்லாத்தை பற்றுக் கொண்டாளா என்று வினவினார்கள். இல்லை அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. 'எத்துணை இனியதாய் இருக்கலாம்; சிறப்புடையதாய் இருக்கலாம். என்றாலும், மதமாற்றம் விரும்பத் தக்கதல்ல. என் மூதாதைகளின் மார்க்கத்தை நான் கைவிடுவது முடியாது' என்று அவள் கூறினாள். பெரியீர், எனக்கும் அவளுக்கும் எப்படி நட்புண்டாயிற்று என்று கேட்கின்றீர்கள்? அதைச் சொல்லுகிறேன் கேட்டருளுக. எங்களைக் கொலைக் களத்திற்குக் கொண்டுபோனார்கள். எங்களை எவரேனுங் காப்பாற்றும் பொருட்டு அன்புடைய பெருமானாகிய ஜெயவீர ராம பாண்டியர் பெரிதும் முயன்றார். முயற்சி வெற்றியளிக்குமுன், காரியம் முடிந்துவிட்டது. கொலைக்களத்திற்கு விரைந்து வந்தார்; அவர் அங்கு வருமுன், என் நண்பர் மூவரும் கொல்லப்பட்டனர். என்ன செய்வார்! நான் மட்டும் காப்பாற்றப்பட்டேன். என்றாலும், அரசனுக்கஞ்சி அவர் என்

னைத் தம்மோடு வைத்திருக்க விரும்பவில்லை. என்னை எங்கேயாவது தப்பி ஓடிவிடுமாறு கூறினர்" என்று கூறிச்சற்று நிறுத்தினர்.

"அப்புறம் நிகழ்ந்ததென்ன?" என்று கேட்டார்கள் ஒலியுல்லா அவர்கள்.

"நான் வழி துறையறியாமல் தப்பி ஓடுங்கால் ஒரு நாள் ஒரு மரம் அடர்ந்த சோலையில், ஒரு மரத்தடியில் பசிக் களைபால் அயர்ந்து படுத்துவிட்டேன். எவரேனும அன்று என்னைக் கண்டு பிடித்திருப்பின், அரசனுடைய உத்தரவு அன்றே தொலைந்திருப்பேன். எதிர்பாராமல் அவ்வமயம் அங்கு வந்த சண்பகவல்லி தேவி, என் திக்கற்ற நிலைக்கிரங்கி எனக்கு வேண்டிய உதவிகள் செய்து எனை ஆதரித்தாள். அவள் ஒரு முஸ்லிம் சிறுமியல்லாவிடினும், அவள் செய்த மகத்தான உதவியை எப்பொழுதும் மறக்க இயலாது."

"உமது பெயரென்ன? சண்பகவல்லி அரபி அறிவாளா?"

"அவள் பல மொழிகளில் பாண்டித்தியமுடையவள். என்றாலும் அவள் அரபி மொழி அறியாள். ஆனல்,

"உமது பெயர்?" என்ன ஒலியுல்லா மீண்டும் வினவினார். "என் பெயர் அன்சாரி என்று வந்தவர் விடையளித்தார்.

"நாங்கள் தென்னடு சென்று, மீனக் கொடியையுடைய பாண்டியனேடு போர் (ஜிஸ்பீல்) செய்வோமாயின், நீர் எங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்ய முன்வருவீரல்லவா?"

தழுதழுத்த குரலில் அன்சாரி, "ஆகா! தடையென்ன? அத்தகைய பாக்கியம் எனக்குக் கிட்டுமா தாங்கள் சித்தமே என் பாக்கியம்."

உடனே அங்கிருந்த ஏனையோர்களும், "அப்பாக்கியம் எங்களுக்கும் கிடைக்குமாறு தேவரீர் அருள்புரிய வேண்டும்" என்று வேண்டி நின்றனர்.

சற்று நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த செய்யது இப்ராஹீம் ஒலியுல்லா அவர்கள், அன்சாரியை நோக்கி, "பாண்டிய நாட்டிலே சண்பகவல்லி நமக்கு ஏதும் உதவி செய்ய முன் வருவாளா?" என்று வினவினார்கள்.

"ஒருக்காலும் அவள் உதவி புரிய மாட்டாள்; விக்ரம பாண்டியன் அவள் மாமன். அன்றியும் அவள் உதவியற்றவர்களுக்கு வேண்டும் உதவிகள் செய்ய முன் வருவாளேயன்றி, பகைவர்களுக்கு இடம் கொடுக்கும் இயல்புடைவள் அல்ல. அவள் இயல்பே அலாதி" என்றார் அன்சாரி.

"ஜெயவீர ராம பாண்டியர்?" என்று ஒலியுல்லா மீண்டும் வினவினார்கள்.

"அப்பெரியாரது இஸ்லாமிய பெயர் முபாரக் அவரும் நிச்சயமாக நமக்கு உதவிபுரியமாட்டார். பாண்டியனது உப்பைத் தின்று வளர்ந்தவர். அவனுக்குத் தீங்கு செய்ய நினையார்" என்றார் அன்சாரி.

* * *

அரப் நாட்டிலிருந்து பாண்டியநாடு சென்று போர் புரிந்து வெற்றி பெறுவதென்பது இலேசான காரியமா? எனவே, அதற்கு வேண்டிய உணவு வசதிகளும், படை பலமும் வேண்டப்படுவதாயின. செய்யது இப்ராஹீம் ஒலியுல்லா அவர்களும், அவர்களுடைய தோழர்களும் இது பற்றிப் பெரிதும் கவலையடைந்தனர். என்றாலும், தங்களுக்கு எம்பெருமானார். இட்ட கட்டளை, 'மதுரை' சென்று மீனக் கொடியானோடு பெரிதும் வெற்றி காண்பதே என்று உறுதியாக நம்பிய ஒலியுல்லா அவர்கள், தங்களுக்கு உதவியளிக்

குமாறு 'றூம்' அரசர் மகுழூகிடம் ஓலை அனுப்பினார்கள். (றூம் அரசரல்லவென்றும் எகிப்து அரசரென்றும், வஜீர் அப்பாஸ்பே அவர்களும் மிசுறு அரசரிடமே, மந்திரியாக வும், கப்பற்படைத் தலைவராகவும் அமர்ந்திருந்தாரென்றும் கூறப்படுகின்றது.)

உள்நாட்டு கலகத்தினால், மனம் உடைந்துபோயிருந்த அவ்வரசர் பெருமான், முதலில் செய்பது இப்ராஹீம் ஒலி யுல்லா அவர்களின் காகிதத்தைக் கவனித்தாரில்லை. எனவே, அதன் உள்ளுரையைப் படித்தறிந்த வஜீர் அப்பாஸ் பே அவர்கள், சமயமறிந்து விஷயத்தை எடுத்தோதினார்கள்.

"எம்பெருமானாரது கட்டளை" என்றதும் மறுபேச் சுக்கு இடமின்றி உடனே ஏற்றுக்கொண்ட அவ்வரசர் பெருமான், பயிற்சியளிக்கப்பெற்ற சிறந்ததோர் பட்டாளத் தையும், அதற்குத் தலைவராக நமது இளம் வஜீரையும் அனுப்பினார்.

அவர்கள் எல்லாரும் ஜித்தா துறைமுகப் பட்டினத்தி னின்றும் மரக்கலங்களிலேறி, செழிப்பான மலைநாடான சேர நாட்டின் ஒரு பகுதியிலே இறங்கி, அங்கிருந்து பாண் டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்றார்கள் (இது விவ ரங்கள், வண்ணம் பல பாடிய வண்ணக்களஞ்சியப் புலவர் எனப்படும் முகம்மது இப்ராஹீம்புலவர் அவர்களால் இயற் றப்பட்ட 'தீன்நெறி விளக்கம்' என்னும் நூலிற் காண்க.)

4

காவற்காடு சூழ்ந்த நீர் அகழி; அதைத் தாண்டியுள்ள கோட்டையில் பல இயந்திர போர்க் கருவிகளும், அவற்றை செய்யும் சாதனங்களும் இருந்தன. அதன் வாயலில் வெற்றிக்கொடி ஆடியது அங்கே கொல்வாள் பிடித்த காவ லர் காவல் காத்தனர். அவர் ஐயுறமல் நகருக்குள் சென்று கொண்டிருக்கும் அந்த அங்கியர்கள் யார்? உயர்ந்து வளர்ந்து,

நல்ல உறுதியான உடற்கட்டமைந்த அந்த வீரர்களை உற்று நோக்குமிடத்து, அவர்கள் தமிழ்நாட்டினராய்த் தோன்ற வில்லை. அங்ஙனமாயின் வேறு யாரா யிருக்கும்?

ஆம்! அவர்கள் அரப் நாட்டினர்தாம். அன்பும் ஆற்றலும் ஒருங்கமைந்த அவ் வரப் வீரர்கள் தென்னவர்த் திருநாட்டிலே, மதி தருங்குடை வழுதியின் இன்பத் திரு நகரிலே நகரின் இனிய காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தவாறு எங்குச் செல்கின்றனர்?

போகச் செல்வமும், தொழிற் செல்வமும், வாணிபச் செல்வமும், அழகும் அணியும், பொன்னும் மணியும் குலுங்கும் பாண்டிமா நகரைச் சுற்றிப்பார்த்துக்கொண்டே அவர்கள் எங்குச் செல்கின்றனர்? நான்கு வருணத்தார்க்கும் உரிய தெருக்கள், முச்சந்தி, சதுக்கம், கோயில், கடைத் தெரு, கலை மன்றங்கள், ஆடல்-பாடல் அரங்கங்கள், சந்து எல்லாம் சுற்றிப் பார்த்துக்கொண்டே பாண்டியர் கோனின் அரண் மனை வீதியை நோக்கிச் செல்லுகின்றனர்?

"மரகதத்தினாற் பலகைசெய் யூசலின் மடவார்
வீரவனப் பெடை கலந்துறைந்தாடல்போல் வியப்பும்
பரவுசித்திர மாடகூடங்களும் பார்த்தே
யரசணித் தெருவீதியின—டந்தனரன்றே.

பழம் பெருமைவாய்ந்த அப்பாண்டிய மன்னனின் அர சவைக்குள்ளே சென்ற அவ்வரப்நாட்டு முஸ்லிம் வீரர்கள் என்ன காண்கின்றனர்?

"கவரிவீச மயில் விசிறிவீச மிகு
கட்டியங்களு முழக்கவே—
யவனியாளரசர் முடிகள்பாத
மலரணுகவே தொழுது நிற்கவே

யிவனையே தழுவி யமரர்
நாடதனி லிந்திரன் குடியிருக்கவே
பவளநீள் சடைய னிதய விக்கிரம
பாண்டியன் னரசிருந்தனன்."

வந்த வீரரிருவரும் பாண்டிய நாட்டின் செழுமையையும், பாண்டிய மன்னனின் சிறப்பையுங் கண்டு வியப்பெய்துகின்றனர்.

"நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்றான் அரசன்.

"மதீனா நகரிலிருந்து இங்கு வந்து கோட்டையை முற்றுகையிட்டிருக்கும் சுல்தான் செய்யது இப்ராஹீம் ஒலியுல்லா அவர்களின் தூதுவர் யாம். தாம் பிறந்த அரபுநாடு நீத்துப் பாண்டி நாடு போந்து, ஈண்டு வாணிபஞ் செய்ய வேண்டி வந்திருந்த முஸ்லிம் வர்த்தகர் மூவரை, இஸ்லாமிய பிரசாரஞ் (இஷா அத்தே இஸ்லாம்) செய்த ஒரே குற்றத்திற்காக இவ்வரசுகொன்றது. இஸ்லாத்திற்கிழைத்த இந்த அநீதிக்கு ஏற்ற பரிகாரந் தேடவே நாங்கள் இங்கு வந்துள்ளோம். இழிவகற்றிய மதிகுல வேந்தே! உன் குலத்தானொருவன், தான் இழைத்த அநீதிக்காகத் தன்னையே தியாகஞ் செய்தான். இஸ்லாத்திற்கு உண்டாகிய இந்த மாசைப் போக்கு. இல்லாவிட்டால், நாங்கள் உன்னோடு போர் செய்வோம். இச் செய்தியை அறிவிக்க வந்த தூதுவரே நாங்கள்" என்று விளம்புகின்றார் தூதுவர். இதனைத் தான் கவி வண்ணக்களஞ்சியம்,

"புவித்த லத்திதிற்குபிரர்தம் மனத்திருள் போகத்
தவிர்த்து—நற்கலிமாவெனு மந்திரஞ் சாற்றிச்
செவிப்புகுத்தகந் தெளிவறத் தீன் வழியாக்கி
யுவப்பு வைத்து நற்பரகதி பெறவுதவுவரே."

"பொருந்தி லாதவர் தம்மொடு பிஸபீல் பொருந்திப்
பருந்து காகங்கட் கிறையிடு வாரிறப் பவரு
மெரிந்து சீறிவெந் தழல்கது விய நரகிடையே
வருந்தியே நெடுநாட்கிடந் தலறுவர் மன்னே."

என்று குறிக்கின்றார்.

தூதுவர் கூறியவற்றைக் கேட்டான் பாண்டியன். கண்களில் அனற்பொறிகள் பறந்தன. வதனம் கொவ்வையெனச் சிவந்தது. பற்களை நெறுநெறக் கடித்தான். தூதுவரை நோக்கி, "தூதுவரே! நீங்கள் சொல்ல வந்ததினால் உயிர் தப்பிப் போகிறீர்கள். இல்லாவிட்டால் நீங்கள் உயிருடன் மீள இயலாது. உங்களை இங்கனுப்பிய தலைவன், எதுவுமே அறியா பேதை போலும்! நலக்க யாம் அரசாள்கின்ற இந்தத் தென்னாட்டிலே எங்கிருந்தோ வந்த "துலுக்கர்கள்" எங்களைச் சமரில் வெல்லுவதற்கியலுமா? தமிழ்ப் பாண்டிய நிலந் துலுக்கனுக்கு நிலைக்குமோ! இந்தக் 'கூழைப் பாளையங்'களுக்கு அஞ்சி நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமோ? வெகு நன்று. ஏ தூதுவரே! நீங்கள் எல்லாரும் உயிர் தப்ப வேண்டுமானால், இந் நாட்டைவிட்டோடிவிட வேண்டும். இல்லையேல், நாளையே போர்முனையில் எங்களைச் சந்திக்க தயாராயிருக்க வேண்டும். உங்கள் தலைவரது தலையை நாளையே வீழ்த்தி என் புகழை நிலைநாட்டுவேன். சொக்கலிங்கமும் கயற்கண்ணம்மையுந் துணையாயிருக்கும்போது எங்களுக்கு வேறு குறையுளதோ? உடனே இவ்விடத்தைவிட்டுச் சென்று உங்கள் தலைவனிடம் இவற்றைக் கூறமின்" என்று கோபங் கொந்தளிக்கக் கூறுகின்றான் சேல்கொடியைத் தனக்கு உரித்தாக்கிக்கொண்ட பாண்டிய விக்கிரமன்.

5

சண்பகம் செய்த ஆரம்ப சிகிட்சையினால், உணர்வு பெற்றெழுந்த அந்த இளம் வஜீர் அப்பாஸ் அந்நள்ளிரவிலே அப் பிணக் குவியல்களின் நடுவிலே, தம்மருகே அமர்ந்து தமக்குத் தாய்மை கனிந்த அன்போடு தொண்டாற்றிய அந் நங்கை நல்லாளை உற்று நோக்கினார். வெண்ணிலாவின் தன்கதிர்கள் அவள் முகத்தில் வீழ்ந்தன. பெண்மையின் பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டாய் நின்ற அந் நங்கை நல்லாளின் நயனங்கள் மிகுந்த இரக்கத்தோடு தம்மையே நோக்குவதைக் கண்டார். இக் கன்னிகை யார்?

ஒரு வேளை தெய்வக் கன்னியோ? இது பூவுலகமா? அன்றி அமராருலகா? ஆ! இன்று பகல் நடந்த போரில் நாம் எதிர் பாராமல் திடீரென்று ம்மைத் தாக்கிய அச்சீரிய வீரனது கை வாளுக் காற்றாது இறந்துபட்டோமா? ஆம்! அப்படித்தான் இருக்கவேண்டும். இப் பெண்மணியும் மேலுலகத்தின் 'ஹூருலின்' என்று சொல்லுவார்களே, அந்தத் தேவ மாதுதான் போலும் என்ற சிந்தனைகள் அலை அலையாக எழுந்து, அவ்விள நம்பியின் மனத்தே வந்துமோதின. ஆனால், சில வினாடிகள் தான். மீண்டும் சுற்றியுள்ள காட்சிகள்; எங்கும் பிணக் குவியல்கள்; கால் ஒடிந்தும், கை ஒடிந்தும்போன முண்டங்கள்; தலைகள் அறுந்த உடல்கள். எங்கு நோக்கினும், கண்ணுக்கெட்டிய தூரம்வரை இரத்த ஆறு பெருகி ஓடியதாலுண்டான செந்நிறக் காட்சிகள். இல்லை, இது போர்க்களந்தான். ஆ! இப்போதுதான் ஞாபகம் வருகிறது. அவன் அடித்த் அடி திடீரெனத் தாக்கியதால் நமக்கு மரண மூர்ச்சை ஏற்பட்டிருக்கவேண்டும். அங்ஙனமாயின், இந்த அழகிய இளநங்கை யார்? அமராருலக அணங்குபோல் காட்சியளிக்கும் இவ் இளஞ் சிறுமி தமிழ் நாட்டு மகளோ! அப்படியானல், இந்த நள்ளிரவிலே பேய்கள் கூத்தாடுவதாய்ப் கூறப்படும் இப்படுகளத்திலே முன் பின் அறியாத அந்நிய நாட்டு ஆடவனுகிய என்னருகே அமர்ந்து, என் மரண மூர்ச்சையைத் தெளிவிக்க அவளுக்கு என்ன அவசியம் ஏற்பட்டிருக்கும்?.........

அப்பெருமகனின் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்தது ஒரு இன்பகரமான குரலொலி.

"வீரர் தலைவரே! இப்போது தங்களுக்கு நல்ல திடம் வந்திருக்குமென்று நினைக்கிறேன். உங்கள் கூடாரத்திற்கு நீங்களாகவே நடந்து போகக்கூடிய ஆற்றல் உங்களுக்கு ஏற்பட்டுவிட்டதல்லவா?"

ஆ! அவள் குரலில் தொனித்த சோகந்தானென்ன? அவள் ஒரு துயரச் சிலையாகவே காணப்பட்டாள்.

அந்தக் கனவான் அப்போதுதான் அவளுக்குத் தன் நன்றியைத் தெரிவிக்க வேண்டுமென்பதை உணர்ந்தார். என்றாலும், அவர் பேசவில்லை. அவளது எழிலுருவத்தையே வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தார்.

மீண்டும் சிந்தனைக் குழம்பியது. குழம்பித்தானே தெளிதல் வேண்டும்!

அவரது குழம்பிய மூளையில் பளிச்சென்று ஓர் எண்ணம் உதித்தது. அன்றைய பகல், தன்னை வீரத்தோடு எதிர்த்து உயிர் நீத்த அழகேந்திர பாண்டியனின் முகஜாடை அப்படியே அக்கன்னிகையின் முகத்தில் பிரதிபலித்தது. அதே நீல நிறக் கண்கள், அதே மிருதுவான அழகிய கூந்தல். உடனே அண்ணாந்து எதிரே நின்ற கன்னிகையை நோக்கினார். அழகின் திரளாய் - எழிலின் உருவாய் இனிய வடிவாய் - அன்பின் ஆரணங்காய்த் - துயரப் பதுமையாய்த் தன் எதிரே நின்றுகொண்டிருந்த இளங் கன்னிகையைக் கண்டாரில்லை.

6

இரவு மணி எட்டு அழகாபுரியின் அந்தப்புரம். சார் மணைக் கட்டிலொன்றில் சாய்ந்தவண்ணம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் தன்னையும் உலகையும் மறந்த நிலையில் ஆழ்ந்திருந்தாள் அழகேந்திரன் செல்வி சண்பகவல்லி. அவளுக்கு **"இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்"** என்ற தமிழ்த்திருமறைப் பொருளாகவில்லை. எங்ஙனம் இயலும்!

அவள் ஆருயிர்த் தந்தை அழகேந்திர பாண்டியன், மூன்றும் நாள் போரிலே உயிர் துறந்த அவலக் காட்சி, அவள் கண்கள் முன்பு காட்சியளித்துக்கொண்டே யிருந்தது. பாடிண்ய மன்னன் இழைத்த தீவினையின் பயனாக உண்டாய இந்தப் போரிலே, அடார்ந்தேறி வெற்றி

கொண்டு, வெற்றிச் சங்கநாத முழங்கிச் சென்ற முஸ்லிம்களைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற ஒரு எண்ணமே அவள் உடலையும் உயிரையும் ஓம்பி நின்றது.

பழிக்குப்பழி வாங்குவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டு, பழம் பெருமை வாய்ந்த அழகாபுரிக் கோட்டையில் திட்டம் வகுத்தாள் பாண்டிமாச் செல்வி சண்பகவல்லி. ஊண், உறக்கமின்றி உயிர்க்கொலை வேண்டி துடித்துக்கொண்டிருந்த அக்கோப் பெருஞ் செல்விக்கு வாழ்க்கையே கசந்தது. ஆனால், நேற்றைய நிகழ்ச்சிகள் அவளது தந்தை அழகேந்திர பாண்டியன் மரணத் தறுவாயில் கூறிய மொழிகள் - அந்த இளங் கனவானுக்குத் தான் ஆற்றிய தொண்டு, செய்த சிகிச்சை அவள் மனத்தே அடிக்கடி தோன்றிக்கொண்டிருந்தன. பழி வாங்கும் நோக்கத்திலேயே நிலைத்திருந்த அவளை இயற்கை விரும்பி அழைக்கலாயிற்று. அவள் செயலற்று சோர்ந்து வீழ்ந்து கிடந்தாள்.

அவ்வமயம் அறைக் கதவைத் திறந்துகொண்டு ஒரு பெண்மணி உள்ளே நுழைந்தாள். அவள் தேவியின் தோழி போலும்.

“எம் பெருமாட்டி! இறப்பது எல்லாருக்கும் இயல்புதானே! ஆண்டாண்டுதோறும் அழுதுப் புரண்டாலும் மாண்டார் வருவரோ! தாங்கள் இவ்வாறு வருந்திக் கொண்டேயிருந்தால், அரசியல் விஷயங்களையும், பிறவற்றையுங் கவனிப்பவர் யார்? எம் அரசியே! கவலையை விட்டு எழுந்திருங்கள். பூங்காவிலே சற்று உலாவி வந்தால், மனம் அமைதியடையும். தேவி! அரசர் பெருமான் இறக்கும்போதும் வீரமரணத்தோடுதான் இறந்தார். அதுவே தங்களுக்கு நிம்மதியை அளிக்குமல்லவா?” என்றாள் தேவியின் தோழி சிந்தாமணி உருக்கத்தோடு.

தேவியின் கயல்விழிகள் இரண்டும், அழுதழுது கொவ்வைப் பழம் என சிவந்திருந்தன. கண்கள் நீர் வார 'சிந்தாமணி' நீ கூறுவது முற்றும் உண்மையே. என்செய்வேன்? கனவிலும் நினைவிலும் என் அருமை அப்பா அருகிலிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது அவர் மரணத்திற்குக் காரணமான அந்த வீரர் தலைவனைக் கொன்று பழிக்குப்பழி வாங்கினாலன்றி, என் மனம் நிம்மதியடையாது. ஐயோ, ஆண்டவனே! எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே. ஆ! அந்த வீரர் தலைவனும், அப்பா கூறியபடி எவ்வளவு நல்ல மனிதன்" என்றாள் சண்பகவல்லி துயரத்தோடு.

"தேவி! நேற்றிரவு தாங்கள் கோட்டைக்குள் வந்தபோது மணி மூன்றிருக்குமல்லவா? கடவுளே! அவ்வளவு நேரமும், அந்தப் போர்களத்திலே, அந்த மயமான பூமியிலே தன்னந் தனியாகவே யிருந்தீர்களா? மெய்காப்பாளர் யாருமின்றித் தாங்கள் அவ்வாறு செல்லலாமா? தங்களுக்கு ஏதேனும் இடைஞ்சல் ஏற்பட்டிருக்குமாயின் எங்கள் கதி என்ன? தாயற்ற சேயைப்போல் நாங்கள் தவிக்க நேரிடுமல்லவா? அரசர் பெருமானின் உயிரற்ற உடம்பைத் தாங்கள் தன்னந் தனியே இங்குக் கொணர்ந்தபோது ஐயோ! எங்களுக்கெல்லாம் எப்படி யிருந்தது தெரியுமா? தேவி! ஆனால் தாங்கள் சொன்ன அந்த வீரர் தலைவர்......" என்று சிந்தாமணி சொல்லி வரும்போது, சண்பகவல்லி இடைமறித்து, "என் தந்தையை வீழ்த்திய வீரனை சொல்லுகிறாயா? ஆம்! அம்முஸ்லிம் வீரன் மரண மூர்ச்சை அடைந்து கிடந்தான். மரணத் தறுவாயில் அப்பா கூறியபடி, நான் அவன் மரண மூர்ச்சையைத் தெளிவித்தேன். அவன் மிக்க மரியாதையான கௌரவமுடைய குடும்பத்திலுள்ளவன் போலும். உம், அது போகட்டும். எப்படியேனும் அவனைப் பழிக்குப் பழிவாங்கினால்தான் என்மனம் நிம்மதியடையும்" என்றாள் தேவி.

"அவருக்குத் தாங்கள் இன்னார் என்பது தெரியுமா?" என்றாள் தோழி சிந்தாமணி.

"எப்படி முடியும்? என்னை முதன் முதலிற் கண்ட ஒருவர், எப்படி என்னை இன்னார் என்று அறியமுடியும்? ஆனால், அந்த வீரன் என்னைக் கண்டதும் பெரிதும் வியப் படைந்தான் என்று மட்டும் நான் உறுதியாய்ச் சொல்லு வேன்" என்றாள் அரசி.

"அம்முஸ்லிம் வீரனை நாம் பழிக்குப்பழி எவ்வாறு வாங்கமுடியும்? நம்மிடம் போதிய அளவு வீரர்களில்லையே!" என்றாள் சிந்தாமணி.

உண்மையே என்றாலும், என்ன செய்வது? அங்ஙனம் பழிவாங்க இயலாவிட்டால் போர்முனையிலேஉயிர்விடுவேன்" என்றாள் தேவி சண்பகம்.

தேவியின் கைகளைப் பற்றிக்கொண்ட தோழி சிந்தா மணி, நடுக்கத்தோடு, 'தாங்கள் அவ்வாறு சொல்லக்கூடாது. ஐயோ! நாங்கள் என் செய்வோம்' என்று கதறினாள்.

7

முஸ்லிம் பட்டாளம் அழகாபுரியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது என்ற செய்தி மக்களிடையே ஒரு பரபரப்பை உண்டாக்கியது. சண்பகவல்லி ஒருபுறம் மகிழ்ச் சியும், ஒருபுறம் துயரமுமடைந்தாள்.

மக்கள் எங்ஙனும் அல்லோல கல்லோலப்பட்டு ஓடினர். அங்குக் கோட்டைக்குக் காவலாயிருந்த சொற்ப வீரரும் வெருண்டோடினர். காரணம்: பாண்டியர் கொடிவீழ்ந்தது, வெற்றியடைந்த வீர முஸ்லிம்களின் கொடி பாண்டியர் கோனின் தலைநகரிலே பறக்க ஆரம்பித்தது என்ற செய்தி, மக்களிடையே பெரியதோர் கலவரத்தை உண்டுபண்ணி விட்டது. முஸ்லிம்களுக்கும், பாண்டிய மன்னனுக்கும் இடையே ஏற்பட்ட போரில் முஸ்லிம்கள் கண்ட வெற்றி சேரனையும், சோழனையுங்கூட திடுக்கிடக் செய்தது. வீர

ருக்கு வீரனாக இளமையிலேயே புகழ்பெற்ற விக்கிரம பாண்டியனின் வீழ்ச்சி, முஸ்லிம்களின் வீரத்தை அறுதியிடும் அளவு கோலாகவே அமைந்தது. எனவே, மக்கள் பீதியடைந்ததில் வியப்பொன்றுமில்லை.

எழுந்தாள் சண்பகம், "இன்னா செய்தாரை மறத்தல் எம்மரபிற் கிழுக்கு. முஸ்லிம்களை வீழ்த்த ஆவன செய்க" என்று கட்டளையிட்டாள் காப்பாளர் தலைவன் வீரநாதனுக்கு.

அவன் என்ன செய்வான்! போதிய படைப்பலமில்லை. பொது மக்களும் போரை விரும்பவில்லை. ஆனால், அரசியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான் கடமையுணர்ந்த அச்செம்மல்.

வெண்புரவி மீதமர்ந்து, விறல் உடைவீரர் புடைசூழ, அழகாபுரியினுள் நுழைந்தார், நமது இளம் வஜீர் அப்பாஸ். அவரது கவின் திருமேனியும், கம்பீரத் தோற்றமும் பரிபூர்ந்த பான்மையும் கண்டோரைக் கவர்ந்தன.

அழகாபுரிக் கோட்டை மேன்மாடி சாரளத்தின் வழியே உற்றுநோக்கிக் கொண்டிருந்த சண்பகவல்லி எதிர்பாரா வியப்பும், திகைப்பும் அடைந்தாள். குளிர்ந்த குருதியில் மக்களைக் கொலைசெய்து மகிழும் ஒரு கொடியனைக் காண எதிர்நோக்கியிருந்த அவள் கண்கள், பரந்த மார்பும், வலிய தோளும், சிறந்த அழகும் உடைத்தான ஒரு செம்மலைக் கண்டன. அது மட்டுமல்ல; அவ்வீரர், தன் இன்னுயிர்த் தந்தையின் கொலைக்குக் காரணமானவரும், தான் அன்றிரவு போர் முனையிலே மரண மூர்ச்சையினின்றும் உயிர்த்தெழச் செய்தவருமான அவ்வீரப் பெருந்தகையே என்பதைத் தெற்றென அவள் உணர்ந்தாள். அவள் கண்கள் இருண்டன. ஒன்றுமே தோன்றாமல் செயலற்ற பதுமை போன்றுநின்று கொண்டிருந்தாள்.

8

தம்மோடு எதிர்த்து நின்று போர் புரியும் இளைஞன், தமக்கு எவ்விதத்திலும் குறைந்தவனல்லன் என்பதை

வஜீர் அப்பாஸ் பே நன்குணர்ந்தார். ஆனால், தம்மினும் ஆண்டால் இளைஞனும், அழகிற் சிறந்தவனுமான அந்த இளம் வீரனது வதனத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல், அவரையும் அறியாது எழும்பிக் கொண்டிருந்தது. அவன் எவ்வளவு திறமையாகத் தனது முகத்தை மறைத்துக் கொண்ட போதினும், அவன் ஒரு சிறந்த அழகன் என்பது அங்கை நெல்லிக்கனி எனத் தெள்ளிதிற் பட்டது. அது மட்டுமல்ல, சேனைத் தலைவன் வீரநாதனின் கட்டளைக்குக் கீழ்ப்படியாது, அச்சமுற்று புறங்காட்டி ஓடிய அப் பாண்டிநாட்டு வீரர்கள் இந்த இளம் வீரனது கூப்பாட்டுக்குத் தலைசாய்த்தது வஜீர் அப்பாஸ் பே அவர்கட்குப் பெரிதும் வியப்பளித்தது. ஒரு சில வீரர்களை மட்டும் வைத்துக் கொண்டு, ஒரு பெரிய பட்டாளத்தோடு போரிடும் இந்த இளம் போர்வீரன், தமிழர் தம் வீரத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாய் இலங்கினன்.

நெடுநேரம் ஒருவரோடொருவர் சளைக்காமல் போரிட்டனர். ஒருவரை யொருவர் அடித்தும், தாக்கியும், குத்தியும் கடுமையான போர் செய்தனர். வர வர அந்த இளம் வீரன், பலங் குன்றினன். வலிய ஆணின் முன், மெலிய பெண் தன்மை வாய்ந்த அந்த இளம வீரன் என் செய்வான்? மற்றைய வீரரும் வீரத்தோடு பொருதனர். எனினும், ஒரு பென்னம் பெரிய சேனையின் முன் இந்த வீரர்கள் எவ்வளவு நேரந்தான் போரிட இயலும்? வீரர் பலர் காயமுற்றனர். சிலருக்குக் கால் ஒடிந்தது. வேறு சிலருக்குக் கையொடிந்தது. பின்னும் சிலருக்கு இடுப்பொடிந்தது. வலக்கை முறிந்தவர், இடக்கையால் வாள் பிடித்தனர். குருதி யொழுக, இவ்வீரர் உயிரை மதியாது எதிரிகளை எதிர்த்து நின்றனர். இரு பக்கத்திலும் பல்லோர் மாண்டனர். இவர்களுக்குத் தலைவனாய் அந்த இளம் வீரனது முகமெல்லாம் இரத்தம்! அதோ அந்த வாள்! பட்! அந்த இளம் வீரனது தோளில் வஜீர் அப்பாஸ் பே வாளின் பிடியினால் ஓங்கி ஓர் அடி அடித்தார். அந்த அழகிய இளம் வீரன் மயக்கம் மேலிட்டு விழுந்தான்: கண்ணை மூடினன்; அப்போது ஒரு

வலிய கை அவனைத் தூக்கியதாக உணர்ந்தான். "ஆ! சிறைப்பட்டேன்; ஐயோ!" என்றான் அந்த இளவல். பிறகு உணர்வற்றான். அந்த வீரமகனின் முகத்தை அப்போது தான் பார்க்க முடிந்தது நமது வஜீர் அப்பாஸ் பே அவர்கட்கு. அவனது முகத்தைக் கண்டதும் வியப்பே வடிவாய் மாறிய வஜீர் அவர்களின் உள்ளத்தே அன்பும் அனுதாபமும் குமுறி யெழுந்தன. அவனது உணர்வற்ற உடம்பைத் தாங்கிய அவரது கைகள் வெடவெடவென்று நடுங்கின. "ஆ! என்ன ஆச்சரியம்! என்ன காரியம் செய்தேன்! கனவிலும், நனவிலும் என் அகத்தே தோன்றி மறையும் அப்பாண்டிமா செல்விக்கா தீங்கிழைத்தேன்'' என்று அவரது வாய் ஏதோ முணுமுணுத்தது.

9

அழகாபுரி அரசனை இழந்து 'அதல குதலப்பட்டது' எமனுக்கு நல்ல வேட்டை. மக்கள் குடல் நடுங்கியது. வீடுகள் எல்லாம் உயிர்க்கும் புதை குழி போல உறக்கங்கொண்டன. கதவைத் தட்டினாலும் திறப்பாரில்லை. போர் நடந்த விடங்களெல்லாம் பிணக்காடும், இரத்த வெள்ளமும் நரகக் காட்சியுமாயின. ஊர் துன்பக் காடானது. எத்தனை உயிர்ச் சேதம்! பொருட்சேதம்!

அரண்மனையைச் சேர்ந்த பூங்கா. அங்கே இயற்கைத் தளிரழகு குலுங்கியது. அண்மையிலுள்ள நீர்த்தடம் அறிஞர் உள்ளம் போலத் தெளிந்திருந்தது. அதில் காலைக் கதிரொளி இனியதோர் காட்சியளித்தது. தோட்டமெல்லாம் தியானத்துள் ஆழ்ந்த துறவியின்மனம் போல அமைதியாயிருந்தது. எங்ஙனும் அமைதியான பூமணங் கமழ்ந்தது.

இங்ஙனம் இயற்கை எழிலும், செயற்கை அழகும் பொலியும் இவ்வனத்தே, ஒரு கனவான், மனக் கவலையால் பீடிக்கப்பட்டவராய் உலாவிக் கொண்டிருந்தார். அவர் உடம்பில் உற்சாகமில்லை, மனத்தில் அமைதியில்லை. இப்பூங்காவிற்குச் சற்று தூரத்தில் பாண்டியர் குலவிளக்கு அழகேந்திர பாண்டியன், சின்னாட்கட்கு முன் குருதி வெள்ளத்தில் புரண்டு கொண்டிருந்த அவலக் காட்சி அவர் கண்கட்கு

முன் நின்றது. அன்றியும், போரில் இறந்துபட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் உருவங்களும் அவர் அகக்கண்ணே காட்சியளித்தன. "ஒரு தனி மனிதன் செய்த குற்றத்திற்காக—தனி மனிதனின் வெற்றிக்காகப் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்துதல் அறமா? நீதியா?" என்ற வினவிற்கு விடை கண்டுபிடிக்க முயன்றார். அவருக்கு ஒன்றுந் தோன்றவில்லை. உலாவிக் கொண்டே பசும் புற்றரையின் மீதமர்ந்தார். வைகறைப் பொழுது—பகலவன் மெதுவாக எழுந்து கொண்டிருந்தான். பச்சைப் பசேலென்ற காட்சி!

யாரோ அவரை நோக்கி வந்தனர். அருகில் வரவும், அவர் அவளை ஆவலோடு பார்த்து, "சிந்தாமணி! தேவியின் உடல் எப்படி? அரண்மனை இராணவைத்தியர் என்ன கூறினார்? தேவி கண் திறந்தாளா? அவளது உயிருக்கு நான் எமனாகவா வரவேண்டும்? ஆண்டவனே! என் மனம் வெடித்துவிடும் போலிருக்கிறதே! என் செய்வேன்..."

"தாங்கள் என்ன செய்வீர்கள்? அப்படி நடக்கவேண்டுமென்றிருக்கும்போது, தாங்கள் வருந்தி என்ன பயன்? அவர் எங்கள் வயிற்றில் பால் வார்ப்பாரோ, நெருப்பிடுவாரோ அறியோம். அவர் போய்விட்டால், எங்களுக்கு இங்கென்ன வேலை? ஐயோ! நினைக்கவே பயமாயிருக்கிறதே... ஆனால், தாங்கள் அவர் சொன்னபடி எவ்வளவு நல்ல மனிதர்......" என்று சிந்தாமணி கூறி வரும்பொழுது அவர் இடைமறித்து,

"அவர் என்ன சொன்னார்! தேவியைத் தானே சொல்லுகிறாய்? அவள் தகப்பனைக் கொன்றவனென அறிந்தும், என் மரண மூர்ச்சையைத் தெளிவித்தனளே! நான் அவளுக்கு எவ்வளவு கடமைப்பட்டுள்ளேன். ஆ! அன்றிரவு அவளை நான் ஒரு தேவகன்னி என்று தான் எண்ணினேன். அவளது முகத்தில் எவ்வளவு சாந்தம், அமைதி" என்றார் நமது வஜீர்.

"இயல்பாகவே அவர் இளகிய மனம் படைத்தவர். என்றாலும், அன்று அவர் தங்களுக்குச் செய்த உதவி அரசரைச் சேர்ந்தது. அவரது கட்டளை" என்றாள் சிந்தாமணி.

"மகத்தான வீரன். தகப்பனுக்கேற்ற மகள். அவள் தன் தகப்பனையே எல்லாவற்றினும் அதிகமாக நேசித்தாளென்று நினைக்கிறேன். அல்லவா?" என்றார் வஜீர் அப்பாஸ்.

"நேசித்தாரா? தம் உயிரையே வைத்திருந்தார். அரசரும் அப்படித்தான். என்னவோ விதி இவ்வாறாயிற்று" என்றாள் தோழி.

"அவள் எவ்வளவு வீரத்தோடு போர் புரிந்தாள்! மகத்தான வீரை! நான் அவளை ஒரு போர் வீரனென்றே எண்ணினேன்" என்றார் வஜீர்.

"யாரது? என்ன, என்ன! தேவிக்கென்ன? யாரோ கூப்பிடுகிறார்கள். ஐயமீன! அஃதென்ன?"

10

இரவு மணி 12. அழகாபுரி அரண்மனையின் அந்தப்புரம். அழகான திரைகளுடன் அமைந்த பட்டு மெத்தை தைத்த கட்டிலில் அழகேந்திரன் செல்வி சண்பகவல்லி படுத்திருந்தாள். அவள் கண் திறக்கவில்லை மருத்துவர் மருந்து போட்டுக் காயத்தைக் கட்டி, இரத்தம் வடிதலை நிறுத்தியிருந்தார்.

அண்மையிலே போட்டிருந்த மெத்தை தைத்த அகலமான நாற்காலிகளில் அமர்ந்தவர்களாய் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர் நமது இளவல் வஜீர் அப்பாஸ் பேயும், அரண்மனை வைத்தியரும். தரையிலே விரிக்கப்பெற்றிருந்த இரத்தினக் கம்பளத்தில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தனர் தோழி சிந்தாமணியும், காந்தாமணியும்.

"ஆ! தேவி! ஐயோ! இதென்ன கோலம்!" என்று இரு தோழியரும் அலறினர். "இப்படியா எங்கள் வாயில் மண்ணைப் போட்டீர்கள்! வைத்தியரே, சொல்லும் உயிர்

இருக்கிறதோ! போயிற்ருே?" என்று முறையிட்டாள் சிந்தாமணி.

திடீரென்று சண்பகவல்லியின் உடம்பு முழுதும் ஒரு விதமாக இழுத்தது. பல நாட்களாக நினைவற்றுப் படுக்கையிலேயேயிருந்த அவள் 'ஜன்னி'யின் கோளாறினுல் ஏதேதோ உளறினுள். "அப்பா, அப்பா" என்றுதான் அடிக்கடி புலம்பினுள். இடையிடையே வஜீர் அப்பாஸ் பேயின் மகத்தான வீரத்தைப் பற்றியும், அவரது கம்பீரத் தோற்றத்தைப் பற்றியும் என்னென்னவோ கூறினுள்.

வைத்தியருக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. உடனே சண்பகவல்லியைச் சோதித்தார். நாது அடித்தது. நெஞ்சு சரியாகத் துடித்தது. 'அபாயம்' இல்லை என்று வைத்தியர் உறுதி கொண்டார். என்ருலும், போதிய சிகிச்சை செய்தார்.

தோழிகளிருவரின் அழுகையும் ஓய்ந்தபாடில்லை. சிந்தாமணி கொஞ்சம் சமாளித்தாள். காந்தாமணி வாய்க்கு வந்தவாறெல்லாம் உளறிக் கொட்டினுள். "தாண்டித் தொலைகடந்து சார்ந்து கெடுந்துலுக்கன, வேண்டித் தவமிருந்து வெம்புலிபோற் பெற்றவனைத், தீண்டித் தண்டாலடித்துத் தேகத் துயிர்வாங்கிப், பாண்டுக் கருவறுத்துப் பாராள வந்தானே." என் கண்ணே! பாண்டியர் குலவிளக்கே! தென்னுட்டார் போற்றும் சிறப்பு உங்கட்குப் போதாதா? பொன்னுட்டார் போற்ற அங்குப் போனீர்களா? அந்த இந்திரனும் தங்களைப் போன்ற ஒரு மகளைப் பெற்ருனு? என் வயிறு பற்றி எரிகிறதே! சின்ன வயதில் இந்தத் தீவினையுந் தான்வருமா? மன்னர்களெல்லாம் போற்றும் தங்களை யிழந்த மாபாவி என்னைப் போலுண்டா? அரசரை இழந்து நாங்கள் தத்தளித்துக் கும்பி வெம்பும்போது தாங்கள் கூட நெருப்பிட்டீர்களே ஐயோ! கடவுளே! கடவுளே..."

கூக்குரல் பொறுக்க முடியாமல், வைத்தியர், "பேசாதிரு" என்று சாடை செய்தார். அதே சமயம் வைத்திய

ரின் சிகிச்சையினால், ஒருவாறு உணர்வுபெற்ற சண்பக வல்லி விழி திறந்து, தன் எதிரே துன்பத்தின் சிகரமாய் வீற்றிருந்த நமது வஜீரை நோக்கினாள். "சண்பகம்! என் அருமைச் சண்பகம்! என் அன்பே! கண்ணைத் திறந்தாயா? என்னைப் பார்க்கிறாயா? நீ உயிரோடிருக்கிறாயா?" என்று உணர்ச்சிப் பெருக்கில் அவர் கூறியது அவருக்கே புரியவில்லை.

11

இரவு மணி 10. அரண்மனையின் பூங்கா. எங்கும் பேரமைதி, உலகமே தூங்கிற்று. அழகிய வெண்ணிலா எங்கும் ஒளி வீசியது. மக்களை மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்த வல்ல வெண்ணிலாவின் தண்கதிர்கள், நம் சண்பகத்தைத் துன்பக் கடலில் ஆழ்த்தின. அப் பூங்காவின் ஊடே, இவ் வுலகையே மறந்த நிலையிலவள் உலாவிக்கொண்டிருந்தாள்.

18 ஆண்டுகாலமாகத் தன் தந்தையோடு உறைந்து வந்த அவள், தந்தையின் அன்பன்றி வேறெதனையும் அறியாள். இல்லாளின்றி ஏகாந்தமாய் வாழ்ந்த அவ் ஏந்தல், தன் இளம் மகளிடத்து எல்லையற்ற அன்பைச் சொரிந்தான். ஆனால், ஒரு மடந்தையை வாழ்விற்குப் பயிற்றுவிக்குங் கலையை அவன் எங்ஙனமறிவான்? அக்கலையை ஒரு அன்னையே அறிவாள். வேனிற்குரிய மலர் வனப்பு இயல்பாகவே உண்டாதல் போல, இளமைக்குரிய அன்பும், ஆசைகளும் இந் நங்கையின் மனத்தில் அரும்பின. அந்த அரும்புகளை வஜீர் அப்பாஸ்பேயின் அன்புப் பார்வை மலர்த்தியது. எனவே, அங்குள்ள கல்மேடையொன்றில் அமர்ந்து தன் சிந்தனை முழுவதையும் ஒரே வழி செலுத்தி, தன் 'கடமை' என்று உன்னி, ஊட்டி வளர்த்த ஒரு உணர்ச்சிக்கும், காதலுக்கும் இடையில் போராடினாள். பேதை என் செய்வாள்! இயற்கையின் கனிந்த கூப்பாட்டை யாங்ஙனம் மறுக்கவியலும்? காதலுக்காகத் தன் கடமையை மறப்பதா? தன் காதற் தந்தையைத் தான் இனிக்காண இயலாது. அதற்குக் காரணமான அந்த அழகிய வீரனை, அவள் உள்ளம் விழைந்தது. அவ் வீரனோடு நேர்முகமாயும் போரிட்டாயிற்று.

இனிச் சூழ்ச்சியால் வீழ்த்தவேண்டும். அன்பு மொழி பயில அரண்மனைப் பூங்கா ஏற்றதென்று பொய்மொழி புகன்று, வஜீர் அப்பாஸ்பேயைத் தனியே வருமாறு வேண்டி அவரை ஒருவரும் அறியாமல் சிறைபிடித்து விடுவதென்ற திட்டம் போட்டிருந்தாள். இந் நோக்கத்துடன் தான். பொறுக்கப் பட்ட 15 போர் வீரர்களுடன், சேனைத் தலைவன் வீரநாதன் பூங்காவையடுத்த கோட்டைக்காட்டிலே ஒளிந்திருந்தான். "யான் குரலெழுப்பி இசை பயில்வேன். அதுகேட்டதும் நீ விரைந்து வந்து வஜீர் அப்பாசைச் சிறைசெய்" என்று சண்பகவல்லி அவனைப் பணித்திருந்தாள்.

திடீரென எழுந்து பின்புறம் நோக்கினாள். ஆம்-அவர் தான்-அன்பும் ஆற்றலும் ஒருங்கேயமைந்த நம் வஜீர்தான். மெல்ல மெல்லத் தயங்கித் தயங்கிவந்துகொண்டிருக்கிறார்!

"செல்வி, ஏன் என்னை இங்கு வருமாறு பணித்தாய்? உன் மனம் இளகிற்று? என்னை மணக்க விருப்பந்தானே!"

சண்பகவல்லி ஏதும் பதில் கூறவில்லை. மீண்டும் வஜீர் அப்பாஸ் அவளை நோக்கி, "சண்பகம்! என்னருஞ் சண்ப கம்! பதில் சொல்ல மாட்டாயா? உண்மையைச் சொல், நான் போய்விடுகிறேன். உன்னை வற்புறுத்துவேனா?"

சண்பகவல்லி ஏதோ கூற வாயெடுத்தாள். ஆயினும், ஏதும் மொழிந்தாளில்லை. தான் மொழிய விரும்பிய மொழி களை மொழிதற்கு மனோபலமற்று சோர்ந்துகிடந்தாள்.

மீண்டும் வஜீரே பேச ஆரம்பித்தார். "அரசிளஞ் செல்வி! நான் எந்தப் பெண்களோடும் பேசியறியேன். பழ கியதுமில்லை. பழகவேண்டிய அவசியமுமேற்பட்டதில்லை. ஆகவே, பெண்கள் விரும்பத்தக்க பேச்சுகள் எவை என் பதை நானறியேன். உலகிலே ஆடவனாய்ப் பிறந்து நான் விரும்பிய—விரும்பும் பெண்மணி ஒருத்தியே. அவ்வொருத் தியைத் தவிர வேறெவர் மாட்டும் என் அன்பு சென்ற தில்லை; இனி நான் இறக்குமளவும் செல்லப் போவது

மில்லை. அந்த ஒருத்தியை என் மனங்கவர்ந்த அந்த மங்கையை இந்த அழகாபுரியிலே விட்டு விட்டு, நான் தனியே தௌர்பாக்கியனாய் "றாம்" தேயத்திற்குப் போகிறேன்" என்று கூறிவிட்டு முகத்தைக்கையினால் மூடிக்கொண்டார். செருமுனையிலே வீரவாளேந்தி அஞ்சா நெஞ்சோடு பொருத அவ் அண்ணலின் நீண்ட பெருமூச்சால், அவரது உடல் குலுங்கி, விசாலமான மார்பகம் விம்மியது.

அன்பிற்கிளகாத உயிருண்டா? அதிலும் பெண்மையுள்ளம்! தாய்மையின் கனிந்த அன்பு அவள் உள்ளத்தே ததும்பி வழிந்தது. வஜீர் அப்பாஸ் பேயின் நிலையைக் கண்ணாரக்கண்டு நெஞ்சார உணர்ந்த அவ் ஏந்திழையாள், மனங்கரைந்து செயலற்று அவரையே நோக்கிக் கொண்டிருந்தாள். அந்த அன்பின் பிரவாகத்தைத் தடுக்க அவள் அஞ்சினாள். அவள் கண்களில் நீர் சுரந்தது. அவளை யறியாமல் அவளுக்குத் துக்கம் பொங்கியது.

"வீரர் தலைவ!" அந்தத் தொனி கிணற்றிற்குள்ளிருந்து பேசுவதைப் போலிருந்தது. பேச்சு தொண்டையிலிருந்து வெளிவரவில்லை. என்றாலும், தன் பார்வையாலேயே உட் கருத்தை வெளியிடுவாள் போல வஜீர் அவர்களின் முகத்தை நோக்கினாள். அந் நோக்கு ஒரு நொடிப் பொழுதே நின்றது. எனினும், அந்நோக்கின் மேன்மையையும், இனிமையையும், கனிவையும மறைப்பதற்கு சண்பகத்தாலேயே முடியவில்லை. திருமகளே போன்று தன் எதிரே நிற்கும் பேரழகி, தன் சாவை விரும்பி மாழ்கின்றாள் என்பது வஜீர் அப்பாஸ் பேயுக்கு அப்பொழுது தெரியாது.

கருமேகம் வெண்ணிலாவை மறைத்தது. "அண்ணலே! தாங்கள் என்னை நேசிப்பது உண்மையாயின், இப்பெண் பேயைவிட்டு ஓடிவிடுங்கள். தங்களைச் சிறைச் செய்யக் கருதியே இங்கழைத்து வந்தேன். போர் வீரர் சிலருடன் வீரநாதன் நான் குறிப்பறிவிப்பின் சிறை செய்ய வரு

வான். என்னை மன்னியுங்கள். நான் அறியாது செய்த பிழையைப் பொறுக்க வேண்டும்'' என்று கெஞ்சினாள் சண்பகவல்லி. அவள் துக்கம் தொண்டை அடைக்கக் கதறினாள்.

"என் அன்பே! அது உன் குற்றமன்று. என் குற்றமே உன் தகப்பனைக் கொன்ற என்னை நீ வெறுப்பது இயல்புதானே! நீ என்னை வீழ்த்த விரும்பியது. என்னிடத்திலுள்ள அன்புக் குறைவால் அன்று. உன்கடமை என்று எண்ணினாய். அதனால் என்னைக் கொல்ல விழைந்தாய். என் அன்பிற்குரியாய், கண்ணீர் விடாதே. நீ என்னிடத்து கொண்டுள்ள அன்பின் மேன்மைமை அறிவேன். கடமையாற்றலின் இன்பமே வாழ்க்கையின் இன்பம். மக்களை நிறை முதலாக்குவதும் அதுதான். உன் தந்தைக்காக உன் வாழ்க்கையையே தியாகஞ் செய்ய விரும்பினாய் பிறர்க்காகத் தனது இன்பத்தைத் தத்தம் செய்யும் அத்தகைய பெரியதோர் தியாகமே மனித வாழ்க்கையின் இலட்சியம். அத்தகைய இலட்சியவாதியாய்த் திகழ்கின்றாய். சண்பகம்! நான் போய் வருகிறேன். இந்த இரவு கடந்த நிகழ்ச்சியின் நினைவே நீ எனக்கு வழங்கிய பரிசு."

சண்பகம் வாய் திறக்கவில்லை. அவரையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். "ஐயோ'' என்று வீறிட்டலறிய தொனியைக் கேட்டதும் வஜீர் அப்பாஸ்பே அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள் சண்பகம் திடீரென ஏற்பட்ட மன அதிர்ச்சியினால் கீழே விழுந்து விட்டாள் ஓடிவந்த வஜீர் அப்பாஸ் அவளைத் தம் கைகளிலே ஏந்தி, அவளின் முகத்தை எறிட்டு நோக்கினார். அவளும் அவரைப் பரிதாபமாகப் பார்த்தாள். கண்ணோடு கண்ணோக்கின், வாய் சொற்களால் என்ன பயன்?

12

காலை நேரம். பகலவன் மெதுவாக எழுந்து கொண்டிருந்தான். பச்சைப் பசேலென்ற காட்சி. அரண்மனையின்

அந்தப்புரம் சித்திர வேலைப்பாடமைந்த கட்டிலொன்றில் செல்வி சண்பகவல்லி சயனித்திருந்தாள். அவளருகே நமது வஜீர் அப்பாஸ் பே அவர்கள் அழகியதோர் ஆண் குழவியைக் கையிலேந்திய வண்ணம் உட்கார்ந்திருந்தனர். தோழிகளிருவரும் வாய் பேசாது மற்றொருபுறம் உட்கார்ந்திருந்தனர். அங்குமிங்கும் சில வேலைக்காரிகள் போய்வந்து கொண்டிருந்தனர். நெருங்கிய உறவினரான முபாரக் (ஜெயவீர ராம பாண்டியர்) அவர்களிடையே வீற்றிருந்தனர்.

'குழந்தைக்கு என்ன பெயரிடலாம்?' என்றார் முபாரக்.

"குழந்தை எவ்வளவு அழகாயிருக்கிறது பார்த்தாயா? சலீமா என்ன பெயர் வைக்கலாம்? நீ தான் சொல்லேன்!" என்றார் வஜீர் அப்பாஸ் பே சண்பகத்தை நோக்கி.

"அப்பாவின் பெயரை வைத்தாலென்ன?" என்றாள் இனிமைத் ததும்ப.

"அது எப்படி முடியும் சலீமா? உன்னை நாங்கள் சண்பகமென்றா அழைக்கிறோம்? இல்லையே! அப்படியானால், உன் குழந்தையை அழகேந்திரனென்று எப்படியழைக்க முடியும்?" என்றார் முபாரக்.

"பெயர் என்ன வைத்தாலும், நான் அப்பாவின் பெயரைச் சொல்லியே அழைப்பேன். அப்பா யிருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி யடைவார்!" என்றாள் சலீமா. அவள் கண்களில் நீரரும்பியது.

"மாமா, அவள் விருப்பப்படியே அவள் அழைக்கட்டும், நாம் குழந்தைக்கு எங்கள் குலத்தோன்றல், ஹாரூன் அல்ரஷீத் பாத்துஷா அவர்களின் பெயரையே வைப்போம். உங்கள் விருப்பமெதுவோ?" என்றார் வஜீர் முபாரக்கை நோக்கி,

"உங்கள் விருப்பமே என் விருப்பமும்" என்றார் முபாரக்.

குழந்தை, முபாரக் கையிற் கொடுக்கப் பட்டது. பாங்குச்சொல்லி, "முகமதுர் ரஷீத்பே, முகமதுர் ரஷீத்பே" என்று எல்லாரும் அழைத்தனர்.

"குழந்தையைத் தாயார் கையிற் கொடுப்போம்" என வஜீர் கூறலும், தோழியரிருவரும் ஓடிவந்து, குழந்தையை வாங்கி மார்புற அணைத்து, அன்னையின் கையில் ஈந்தனர். அன்னை சலிமா, ஆர்வத்தோடு வாங்கி, கொவ்வைக் கனியெனச் சிவந்திருந்த அதன் இதழ்களில் முத்தி, "என் கண்ணே, அழகேந்திரா" எனலும், அவள் கண்கள் கலங்கி. கண்ணீர் வடிந்தது.

முற்றிற்று

விரும்பிப்படிக்கவும் விளம்பரம் செய்யவும்
ஏற்றது

வா ெ ளி

★

மாத வெளியீடு ஒன்றே.

|||

- ❋ வனப்புமிக்க முகப்பு முழக்கம்!
- ❋ உணர்ச்சி நிறைந்த கட்டுரைகள்!
- ❋ எழுச்சி யூட்டும் கவிதைகள்!
- ❋ களிப்பளிக்கும் கதைகள்!
- ❋ மனங்கவரும் உன்னத பட இணைப்பு!

|||

சுமார் 50 பக்கங்களில் பிரதி மாதம் முதல்வாரத்தில் வெளிவந்துக்கொண்டிருக்கிறது. இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

வருட சந்தா (உள்ளூர்) ரூ 3—0—0.
,, (வெளியூர்) ரூ 4—0—0.

நிர்வாகி:

வானொளி

காரைக்கால்

எதிர்பாருங்கள்!

மூவா மூவர்

முஸ்லிம் பெருமக்கள் வரலாறு.

எழுதியவர்-:
நாகூர்
சித்தீஜுனேதா பேகம்.

ஸ்டார் பிரிண்டிங் ஓர்க்ஸ், காரைக்கால்.